1980 ஆகஸ்ட் 1]

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில் இந்த அவையிலே மூன்று விதமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆரம்பத்தில் கூட்டுறவுக் கடன்கள் ரத்து என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு 5 ஏக்கருக்கு உட்பட்ட சிறு விவசாயிகளுக்கு கடன் ரத்து என்று சொல்லியிருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி கூட்டுறவுத்துறையிலே உள்ள தணிக்கைத் துறையைப்பற்றி, தாங்கள் விவசாயத்திற்குப் போனால் அந்த அமைச்சர் பதில் சொல்லவேண்டியிருக்கும்.

திரு. அ. செல்வராசன்: ஆளுங்கட்சி உறுப்பினர் மட்டும் அமெரிக்காவுக்கு எல்லாம் போனாரே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவரை நிறுத்தியாகி விட்டது. தாங்கள் அமருங்கள்.

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் கீழ் தணிக்கைத் துறை இல்லாமல் புது அமைப்பாக ஏற்படுத்துவது சிறந்தது என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் தணிக்கை செய்ததற்குப் பிறகு சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட் சான்றிதழ் பெறவேண்டுமென்று சொல்வது தணிக்கைத் துறையையே அவமதிப்பதாகும். கடந்த இரண்டு ஆண்டுகளாக சார்ட்டர்ட் அக்கவுண்டன்ட்களிடமிருந்து சான்றிதழ்கள் பெறவேண்டுமென்று உத்திரவு அனுப்பப் பட்டிருக்கிறது. அது சரியல்ல. அதை நீக்குவதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: There is vast difference between the qualifications of a Co-operative Auditor and a Chartered Accountant. சார்ட்டர்ட் அக்கவுன்டன்ட்களைப் பொறுத்தவரையிலும் அவர்கள் தனித்திறமை வாய்ந்தவர்கள் அது அகில இந்திய ரீதியில் இருந்து வருகின்ற முறை. மாண்புமிகு உறுப்பினர் ஆடிட்டைப் பொறுத்தவரையில் அது செம்மையாக இருக்க வேண்டுமென்று கருத்துடையவர்களாக இருப்பார்களானால் இந்த முறையின், மூலமாக அது மேலும் செம்மையாக இருக்கும் என்பதால் அதை ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

ஈரோட்டில் லேபர் கோர்ட் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 92—திரு கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர்

நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) பெரியார் மாவட்டம், ஈரோட்டில் தொழிலாளர் பிரச் சனைகளுக்கு துரிதமாக தீர்வு காணும் பொருட்டு லேபர் கோர்ட் ஒன்று அமைக்கத் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) அதுவரையில் கோவை லேபர் கோர்ட் மாதம் ஒருமுறை ஈரோட்டில் நடத்த உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) இல்லை.

(ஆ) மாதம் ஒருமுறை நடத்த உத்தேசம் இல்லை. ஆனால் எப்பொழுது தேவைப்படுகிறதோ, அவ்வப்பொழுது கோயம் புத்தூர் தொழில் நீதிமன்றம் ஈரோட்டில் முகாம் செய்து செயல் பட்டு பெரியார் மாவட்டத்தில் எழுந்துள்ள தொழில் தகராறு களைத் தீர்த்து வைக்கும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம் பெரியார் மாவட்டம் என்று தனி மாவட்டமாகவே அமைக்கப் பட்டாகிவிட்டது. ஈரோட்டைச் சுற்றிப் பல தொழில்கள் வளர்ந்து வருகின்றன. தொழில் தாவாக்கள் ஏராளமாக வளர்ந்து வருகிற நிலைமையில் அந்த கோர்ட் அமைப்பதாலே என்ன தவறு வரும், என்ன கஷ்டம் ஏற்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே இதுவரையில் நடந்து வந்தது தொடர்ந்து நடக்கும். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல் தனியாக ஒரு நீதிமன்றம் இருந் தால்தான் செம்மையாக செயல்படமுடியும் என்ற சூழ்நிலை ஏற்படுமானால் அரசு அதைப்பற்றி பரிசீலனை செய்யும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அதே போன்று அங்கே தொழிலாளர் இலாகாவினுடைய டெபுடி லேபர் கமிஷனர் போன்ற உத்தியோகஸ்தர்களும் ஈரோட்டிற்கு என்று தனியாக இல்லை. அதாவது ஏற்படுத்துவதற்கு உடனடியாக முயற்சி செய்வார்களா?

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலை வரவர்களே, ஒரு டெபுடி லேபர் கமிஷனர் சேலத்திற்கு வரப்போகிறார். அதுவே மாண்புமிகு உறுப்பினரவர்களின் கோரிக்கையை நிறைவேற்றியதாக ஆகும் என்று கருதுகிறேன்.

திரு. எம். ஆறுமுகம்: தலைவரவர்களே, ஆறு மாவட்டங் களுக்கும் சேர்ந்து— அதாவது நீலகிரி, கோவை, பெரியார், சேலம் தர்மபுரி போன்ற இப்படிப்பட்ட மாவட்டங்களுக்குச் சேர்ந்து தான் கோவையிலே இருக்கிறது. கோவையிலே இருக்கின்ற

1980 ஆகஸ்ட் 1]

லேபர் கோர்ட், மற்ற மாவட்டங்களுக்கு அதிகமாக கேம்ப் செல்வதில்லை. இதனால் வெளியிலே இருப்பவர்கள் கோவைக்கு வந்து தொழில் தகராறுகளை நடத்த வேண்டியிருக்கிறது. கோவையில் இருக்கின்ற லேபர் கோர்ட், தொழில் தகராறுகளை மட்டும், தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்னைகளைப்பற்றி மட்டும் டீல் செய்வது இல்லை. மற்ற கேஸ்களையும் நடத்து கிறார்கள். ஆகவே தொழில் தகராறுகள் பற்றிய வழக்குகள் அதிகமாக இருப்பதால், வழக்கு மன்றங்கள் வெவ்வேறாகப் பிரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவ ரவர்களே, கோவையில் உள்ள தொழில் கோர்ட்டுக்கு அதிகமாக வேலை இருக்குமேயானால் அதைப்பற்றிப் பரிசீலனை செய்ய லாம்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர் நலன் கருதி, மாவட்ட அளவில் இருக்கின்ற லேபர் கோர்ட்டுகளை கோட்ட அளவிலே செய்தால் தொழிலாளர் களுக்கு நன்மையாக இருக்கும். அந்த முறையில் இந்தப் பிரச்னையைத் தீர்க்க அரசு முயலுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை வரவர்களே, அரசுக்கு இப்போழுது அப்படிப்பட்ட யோசனை இல்லை.

திரு, ஜே. ஹேமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள், தொழிலாளர் மானியத்தின் மேல் பேசக்கூடிய நேரத்தில், தொழிலாளர்களுக்கு நேரடியாக நீதிமன்றகளுக்குப் போவதற்கான சட்ட திருத்தத்தைக் கொண்டு வருவதாக அரசு எண்ணுகிறது என்று குறிப்பிட்டார்கள் அந்த நோக்கதின் அடிப்படையில் ஒவ்வொரு டெபுடி லேபர் கமிஷனரின் ஜூரிஸ்டிக்ஷன் ஏரியாவிலேயாவது ஒரு லேபர் கோர்ட்டை அமைக்க முன்வருவார்களா? ஏனென்றால் இப் பொழுது லேபர் கோர்ட்டுகளிலே அதிகமான கேஸ்கள் தேங்கி இருக்கின்றன என்ற அடிப்படையில், குறைந்தபட்சமாக, மாவட் டத்திற்கு என்று இல்லாவிட்டால்கூட, டெபுடி லேபர் கமிஷனரின் ஏரியாவிலேயாவது கோர்ட் அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, நான் முன்பு சொன்னதுமாதிரி, திருநெல் வேலிக்கு டெபுடி லேபர் கமிஷனர் வரப் போகிறார். அங்கே கோர்ட் வைக்க வேண்டியது இல்லை. வைப்பது என்றால் நிதி ஆதாரங்களையும் கவனிக்க வேண்டும். இது ஆழமாகப் பரிசீலிக் கப்பட வேண்டிய பிரச்னை. ஆழமாகப் பரிசீலனை செய்யலாம்.

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவரவர்களே, டெப்டி லேபர் கமிஷனர், சென்னை-1 அவர்கள்தான் வட ஆற்காடு, தர்மபுரி, சென்னை ஆகிய மாவட்டங்களைப் பார்க்கிறார்கள். எனவே, அவர்களுக்கு அதிகமான வேலைப்பளு இருக்கிறது. வட ஆற்காடு தர்மபுரி மாவட்டங்களுக்குத் தனியாக டெப்டி லேபர் கமிஷனர் நியமிக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுதுதான் இரண்டு டெபுடி லேபர் கமிஷனர்களை, அதிகமாக நியமிக்க இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்களின் ஆலோசனையைப் பிறகு பரிசீலனை செய்யலாம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் திருநெல்வேலியில் லேபர் கோர்ட் நிறுவப்படும் என்று சொன்னார்கள். (குறுக்கீடு) டெபுடி லேபர் கோர்ட் நிறுவப்படும் என்று சொன்னார்கள். அது எந்தத் தேதியிலிருந்து செயல்படும் என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, திருநெல்வேலியில் டெபுடி லேபர் கமிஷனர் நியமிக்கப்படுவார் என்றுதான் சொன்னேன். விரைவிலே அவர் அங்கு சேர்ந்து விடுவார்.

ஆற்காட்டில் உள்ள அரசு மருத்துவமனை.

*வினா எண். 93 - திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) வட ஆற்காடு மாவட்டம், ஆற்காட்டில் உள்ள அரசு மருத்துவமனைக்கு கூடுதலாக கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) இக்கட்டடங்கள் கட்டும் பணி எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) வினாவிற்கு இடமில்லை.